சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண். 144/2024    நாள்:10.10.2025

வா.சா:– 1 செந்தில்குமார்     ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை  (பிரதிவாதிகள் தரப்பில்):–

1983ம் வருடத்தில் எனக்கு எத்தனை வயது என்றால் 9 வயது.  எனது அப்பா, அம்மா கொடுமுடி கிராமம் சர்வே எண்.683/1, 683/3ல் தனித்தனியாக கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.  எனது அப்பா மற்றும் அம்மா இருவரும் தலா 1 ஏக்கர் 15 சென்ட் கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.  மேற்படி இரண்டு கிரயமும் 1983ம் வருடத்தில் கிரயம் பெற்றது என்றால் சரிதான்.  கிரையம் வாங்கிய சொத்தை 1983ம் வருடத்தில் இருந்து எனது அம்மா, அப்பா அனுபவித்து வந்தார்கள் என்றாலும், என் அப்பா இறப்பிற்கு பின்னிட்டு நானும், எனது அம்மாவும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.  மேற்படி சொத்துக்களை  கிரையப்பத்திரப்படியும், அனுபவப்படியும் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.  என் அப்பா, அம்மா வாங்கிய கிரய பத்திரத்திலோ அல்லது வருவாய் துறை ஆவணங்களிலோ தாவா சொத்தான கொடுமுடி கிராமம், ரீ.ச.எண்.683/2, 683/4 காலைகளில் எனக்கு பாத்தியம் உள்ளது என்று எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.  ஆனால் ஒரு பகுதியை நாங்கள் அனுபவித்து வருகிறோம்.  வருவாய் துறை ஆவணங்களில்  ரீ.ச.எண்.683/2, 683/4 காலைகளில் உள்ள பூமி 1,2 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.  அதில் அவர்களுக்கு 90 சென்ட் மட்டும் பாத்தியம்.  தாவா சொத்து அனைத்தும் எங்களுக்கு  பாத்தியப்பட்டது என்று காட்டுவதற்கு எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.  மேற்படி சொத்துக்களை 1983ம் வருடத்தில் இருந்து அனுபவித்து வருகிறீர்கள் என்பதை காட்டுவதற்கு வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.    எனது பெற்றோர் 1983ல் கிரையம் பெற்ற சொத்துக்கள் முழுவதும்  ரீ.ச.எண்.683/1 மற்றும் 683/3ற்குள்தான் அமைந்துள்ளது என்றால் சரியல்ல.   ரீ.ச.எண்.683/2, 683/4 ஒரு பகுதியில் அமைந்துள்ளது.  நான் கிரையம் பெற்ற சொத்து  ரீ.ச.எண்.683/2, 683/4 அமைந்துள்ளது நிரூபிக்க நீதிமன்ற

ஆணையர் மூலம் அளவீடு செய்யப்பட்டதா என்றால் இல்லை. ரீ.ச.எண்.683/2, 683/4ல் அமைந்துள்ள பூமி ரீ.ச.எண்.683/1 மற்றும் 683/3 ஐ விட எவ்வளவு அடி உயரத்தில் அமைந்துள்ளது என்றால் 683/1,2, 4 ஒரே சமமாக உள்ளது. 683/3ஐ விட 683/1,2,4 ஆகிய பூமிகள் 3 அடி உயரத்தில் அமைந்துள்ளது. நான் இந்த வழக்கில் ரீ.ச.எண்.683/2ல் 16 சென்ட் நிலம் கேட்கிறேனா அல்லது ரீ.ச.எண்.683/4ல் 16 சென்ட் நிலம் கேட்கிறேனா என்றால் ரீ.ச.எண்.683/2, ரீ.ச.எண்.683/4 இரண்டிலும் சேர்த்துதான் கேட்கிறேன். 16 சென்டின் நீள, அகலம் சொல்லமுடியுமா என்றால் துல்லியமாக சொல்ல முடியாது. 16 சென்ட் இடத்திற்கும் பிரதிவாதிகள் பூமிக்கும் இடையில் நிலையான அத்து இருந்ததா என்றால் வரப்பு இருந்தது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தரிசாக உள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு ரீ.ச.எண்.683/2 மற்றும் ரீ.ச.எண்.683/4 தரிசாகத்தான் உள்ளது. ரீ.ச.எண்.683/2 மற்றும் ரீ.ச.எண்.683/4ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 6 சென்ட். நான் அனுபவித்து வரும் ரீ.ச.எண்.683/1 மற்றும் ரீ.ச.எண்.683/3ல் உள்ள பூமியை அளந்து பார்த்தால் 2 ஏக்கர் 30 சென்ட் அதிகமாக இருக்கும் என்றால் இருக்கலாம். அளந்து பார்க்கவில்லை. அதை ஒட்டி எங்களுடைய பூர்வீக பூமி ரீ.ச.எண்.683/8ல் அமைந்துள்ளது. எனக்கு இரண்டு கிரைய பத்திரத்தின்படி 2ஏக்கர் 30 சென்ட் பூமி ரீ.ச.எண்.683/1 மற்றும் ரீ.ச.எண்.683/3ல் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. எனது கிரையபத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் எதுவும் ரீ.ச.எண்.683/2 மற்றும் ரீ.ச.எண்.683/4ல் அமையவில்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி பிரதிவாதியின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>Sd/xxx P. Sridevi, L.L.M.,<br>Subordinate Judge,<br>Kodumudi |